

திருவாரூர் நகரம் 5வது வார்டு கேக்கரை கீழத் தெருவில் தீ விபத்து ஏற்பட்டு உடமைகளை இழந்த குடும்பத்தினருக்கு கழகத் தலைவர் தளபதி, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது வழிகாட்டுதல்களின்படியும், மாவட்டகழகச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்களின் ஆலோசனையின்படியும், நகர கழகச் செயலாளர் வாரை.எஸ். பிரகாஷ் மற்றும் பொருளாளர் – நகர்மன்ற உறுப்பினர் ஆர். ரஜினி ஜின்னா ஆகியோர் நிவாரணப் பொருட்களை வழங்கி ஆறுதல் கூறினர்.



கழகத்தின் மூத்த முன்னோடி – முன்னாள் அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி அவர்களின் 107 வது பிறந்த நாளை முன்னிட்டு நகர தி.மு.க. சார்பில் நகர செயலாளர் வீரா.கணேசன் ஏற்பாட்டில் மன்னார்குடி பேருந்து நிலையத்தில் உள்ள மன்னை அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, மாநில விவசாய அணி செயலாளர் ஏ. கே. எஸ்.விஜயன், சட்டத்திட்ட திருத்தக் குழு உறுப்பினர் பி.ராசமாணிக்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தலையாமங்கலம் ஜி.பாலு, சு.ஞானசேகரன், மாவட்டக் கழக அவைத்தலைவர் க.தனராஜ், நகர் மன்றத் தலைவர் மன்னை த.சோழராஜன்,ஒன்றியச் செயலாளர்கள் வீ.எஸ். ஆர்.தேவதாஸ், நா.கவியரசு, நகர அவைத் தலைவர் த.முருகையன், தொ.மு.ச. பொதுச் செயலாளர் பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜ.பூபாலன், கலைவாணி மோகன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் மீனாட்சி சூரியபிரகாஷ், நகர பொருளாளர் கு.பா.பாபு, மாவட்ட பிரதிநிதி மு.மணிமாறன்,நகர துணை செயலாளர்கள் வெங்கடேஸ்வரன், இளமாறன், வளர்மதி மணிவண்ணன் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

கடும் மழையால் வெட்டவெளிச்சம்:

தமிழ்நாடு மின்வாரியத்தின் மோசமான பராமரிப்புப் பணிகள்!

'தி டைம்ஸ் ஆப் இந்தியா' ஆங்கில நாளேடு குற்றச்சாட்டு!

சென்னை, அக். 22-

வடகிழக்குப் பருவமழையின் முதல் கனமழையானது, தமிழ்நாடு மின்சார விநியோகக் கழகத்தின் (TNPDCL) பராமரிப்புப் பணிகளை அம்பலப்படுத்தியுள்ளது என்று தி டைம்ஸ் ஆப் இந்தியா ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.

சனிக்கிழமை இரவு முதல் பல பகுதிகளில் மின்வெட்டு ஏற்பட்டது. நகரின் பரபரப்பான வர்த்தக மையங்களில் ஒன்றான கோயம்பேடு மொத்த விற்பனைச் சந்தைக்கு, ஞாயிற்றுக்கிழமை மாலை வரை மின்சாரம் மீண்டும் வழங்கப்படவில்லை.

ஆயுத பூஜை கொண்டாட்டங்களுக்கு முன்னதாக, சனிக்கிழமை இரவு சுமார் 10 மணியளவில் பழச் சந்தைக்கான மின் விநியோகம் நிறுத்தப்பட்டதால் வியாபாரம் பாதிக்கப்பட்டது. பல கடைகளில் பேட்டரி பேக்கப் தீர்ந்து போனதால், பழங்களைச் சேமிப்பதும், விளக்குகள் அமைப்பதும் சிக்கலாகியது," என்று சென்னை கோயம்பேடு பழங்கள் கமிஷன் முகவர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். சீனிவாசன் கூறினார். பழச் சந்தையில் மட்டும் சுமார் 600 கடைகள் உள்ளன. மின் தடைக்குக் காரணமான சேதமடைந்த நிலத்தடி கேபிள் சரிசெய்யப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இருப்பினும், சில நாட்களுக்கு முன்பு சந்தைக்கு சுமார் 11 மணி நேரம் மின் விநியோகம் நிறுத்தப்பட்டதாக வியாபாரிகள் புகார் தெரிவித்தனர். "சந்தை முதலில் அமைக்கப்பட்ட போதே நிலத்தடி கேபிள்கள் பதிக்கப்பட்டன. அவற்றை மாற்ற வேண்டும். ஆனால், செலவை யார் ஏற்பது என்பது குறித்து சென்னை பெருநகர அபிவிருத்தி ஆணையத்திற்கும் (CMDA) தமிழ்நாடு பொதுத் துறை நிறுவனத்திற்கும் (TNPDCL) இடையே வாக்குவாதம் நடந்து வருகிறது," என்று மற்றொரு வியாபாரி கூறினார். சந்தை வளாகத்தின் தலைமை நிர்வாக அதிகாரி இந்துமதியிடம் கருத்து

Extended power cuts in city expose poor upkeep by TNPDCL

TIMES NEWS NETWORK

Chennai: The first heavy downpour of the northeast monsoon exposed poor maintenance work by Tamil Nadu Power Distribution Corporation (TNPDCL), as several areas across the city reported power cuts since Saturday night, some extending into Sunday.

Supply to Koyambedu wholesale market was not restored until Sunday evening, affecting business ahead of Ayudha Puja celebrations. "The underground power cables were laid when the market was set up and should be replaced. Chennai Metropolitan Development Authority and TNPDCL have been sparring over who should bear the cost," said a trader.

நிலத்தடி மின் கேபிளில் ஏற்பட்ட கோளாறு காரணமாக புளியந்தோப்புப் பகுதி மக்கள் ஞாயிற்றுக்கிழமை நாள் முழுவதும் மின் வெட்டைச் சந்தித்தனர். அதே சமயம், கோபாலபுரத்தில் மின்மாற்றியில் ஏற்பட்ட தீ விபத்தால் மின் தடை ஏற்பட்டது.டி. நகர் மற்றும் மாம்பலத்தில், மூன்று வெவ்வேறு கோளாறுகள் காரணமாக வீடுகளும் வணிக வளாகங்களும் இருளில் மூழ்கின. சனிக்கிழமை இரவு பெய்த கனமழையைக் காரணம் காட்டி, அண்ணா சாலைப் பகுதிக்கு டி.என்.பி.டி.சி.எல் மின் விநியோகத்தை நிறுத்தியது.

இதற்கிடையில், பல வேறு பகுதிகளில் மேல் நிலை மின்கம்பிகள் அபாயகரமாகத் தாழ்வாகத் தொங்குவதாகவும், நிலத்தடி மின்கம்பிகளிலிருந்து புகை வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். திருவேற்காட்டில், ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மேல்நிலை மின்கம்பிகள் மீது மரங்கள் விழுந்ததால் மின் வெட்டு ஏற்பட்டது. காலை 7.30 மணியளவில் மின் விநியோகம் மீண்டும் தொடங்கப்பட்டதாக தமிழ்நாடு மின் வாரிய மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

சனிக்கிழமை மாலை கனமழை தொடங்கியதை அடுத்து, மாதவரம் மற்றும் எண்ணூர் பகுதிகளில்தான் முதலில் மின்வெட்டு ஏற்பட்டது; ஞாயிற்றுக்கிழமை காலை மின் விநியோகம் மீண்டும் வழங்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமையும் மின்வெட்டு தொடர்ந்ததால், நீலாங்கரை, புளியந்தோப்பு, மாங்காடு, திருவொற்றியூர், * திருவேற்காடு மற்றும் கொட்டிவாக்கம் உள்ளிட்ட பல பகுதிகள் பாதிக்கப்பட்டன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

வரும் அக்.30-அன்று பசும்பொன் வருகை தரும்

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு மாபெரும் வரவேற்பு!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, அக். 22-

சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் காரைக்குடியில் உள்ள தலைவர் கலைஞர் பவள விழா மாளிகையில் பசும் பொன் தா.கிருட்டிணன் ஆண்டு அரங்க த்தில் மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மாநில இலக்கிய அணி புரவலர் மு.தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கைமாறன் வரவேற்று பேசினார்.

இந்த கூட்டத்தில் கழக தலைவர் தளபதி அவர்களால் அறிவிக்கப்பட்ட மாவட்ட மறுசீரமைப்பு குழு பார்வையாளர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தங்கபாண்டியன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் இளையராஜா ஆகியோர் கலந்து கொண்டு தொகுதி மறு சீரமைப்பு குறித்து பேசினார்கள்.

கூட்டத்தில் கலந்து கொண்டு முன்னாள் அமைச்சர் மாவட்டக் கழக செயலாளர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது:-

நடைபெற்று முடிவடைந்த சட்டமன்றத் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்கான காரணம் குறித்து ஆராய கழக தலைவர் தளபதி அவர்களால் தொகுதி மறுசீரமைப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. நமது தொகுதி பார்வையாளராக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தங்கபாண்டியன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் இளையராஜா ஆகியோர் கலந்துகொண்டு கடந்த இரண்டு மாதங்களாக தொகுதி மறு சீரமைப்பு குறித்து ஆய்வு நடத்தினார்கள். இதில் ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகளை நேரில் சந்தித்து இந்த ஆய்வு கூட்டத்தினை 100% வெற்றிகரமாக முடித்து உள்ளார்கள்.

இதற்கு ஒத்துழைப்பு நல்கிய மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர,பேருர் கழக நிர்வாகிகள் ஆகியோருக்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் தேர்தலில் நமது மாவட்டத்



திற்கு ஒதுக்கப்பட்ட நான்கு ஊராட்சிகளில் கழகத்தினர் அனைவரும் அயராது பணி யாற்றி வாக்குச் சாவடிகளில் கழக வேட்பாளருக்கு கூடுதலாக வாக்குகளை பெற்று தந்தீர்கள். அதற்கு உங்களுக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்காலத்தில் நாம் பணியாற்ற வேண்டிய விதம் குறித்து நம்முடைய கழகத் தலைவர் தலைவர்தளபதி அவர் கள் அறிவிப்பார்கள் . கழக தளபதி அவர்கள் அறிவிக்கும் எத்தகைய கட்டளையும் நிறைவேற்றும் முதல் மாவட்டமாக சிவகங்கை மாவட்டம் தொடர்ந்து செயல்படும் என்ற உறுதியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் நம்முடைய எதிரிகளை வீழ்த்துவதற்கு ஒற்றுமையுடன் ஒன்றுபட்டு போராட வேண்டும் . கழகத்தினர் எதற்கும் என்றும் சளைத்தவர்கள் அல்ல .நாம் ஒன்று பட்டு போராடினால் எதிரணியினரை சுலபமாக வீழ்த்த முடியும் . அந்த வகையில் நாம் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

24ம்தேதி திருப்பத்தூரில் மாமன்னர் மருத்துவர்கள் குருபூஜை 30ஆம் தேதி பசும் பொன் முத்து ராமலிங்கத் தேவர்குருபூஜை ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது. பசும் பொன் குருபூஜை நிகழ்ச்சிக் கு கழகத் தலைவர் தளபதி அவர்கள் வருகைதரு உள்ளார்கள். அவருக்கு மாவட்ட எல்லையான திருப்புவனத்தில் சிறப்பான வரவேற்பு தரப்பட உள்ளது. இதில் மாவட்ட நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை சிறப்பித்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கே.ஆர்.பெரியகருப்பன் சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச.

தருமபுரி மண்டல மத்திய சங்க நிர்வாகிகள்!

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக தொ.மு.ச. தருமபுரி மண்டலத்தின் (பதிவு எண். 182/DRP, பேரவை இணைப்பு எண். 469) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் 14.10.2026 அன்று பேரவைச் செயலாளர்-V. குருநாதன் அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது. அதில் மத்திய சங்க நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

மத்திய சங்க நிர்வாகிகள் தலைவர்-T. வாசுதேவன் DR 6814 -கிருஷ்ணகிரி புறநகர், துணைத் தலைவர்கள்-) D. சரவணன் DR-5800 -தர்மபுரி நகர்,2) K. ராஜாமணி DR 6453 -தர்மபுரி நகர்,3) S. அசோகன் DR 6985 - அரூர்,4) K. சிவகுமார் DR 6229 - கிருஷ்ணகிரி நகர்,5) N. பார்த்திபன் DR 6919 - கிருஷ்ணகிரி நகர்.

பொதுச்செயலாளர்-T. யுவராஜ் CR 5824 - பாலக்கோடு.

துணைப்பொதுச்செயலாளர்கள் -1) G. முத்துசாமி CR 6021 - கிருஷ்ணகிரி நகர்

செயலாளர்கள், 2) A. செல்வம் CR 6822 - அரூர், 3) K. தேவன் CR 7744 - சேலம்,

4) V.வீரமணி DR 6547 ஒசூர் புறநகர், 5) G.ராஜேந்திரன் TR 5553 -பென்னாகரம்

செலாளர்கள் -1) P. மாது CR 6891- தர்மபுரி புறநகர், 2) S. செந்தில்குமார் DR 6697 -கிருஷ்ணகிரி புறநகர்,3) C. குபேந்திரன் DR 7443 - பாலக்கோடு, 4) J. ஜெயபிரகாஷ் DR 7143 தர்மபுரிநகர் 5) M. ராஜேந்திரன் DR 5723 - ஊத்தங்கரை.

பொருளாளர் - R.வெற்றிவேல் CR 7023 - பென்னாகரம், பிரச்சார செயலாளர்-N.P. முருகன் CR 6966 -தர்மபுரி புறநகர், அமைப்புச் செயலாளர் -M.பரமசிவம் CR 6639- கிருஷ்ணகிரி புறநகர்

செயற்குழு உறுப்பினர்கள்-1) B. பாலகிருஷ்ணன் CR 8110 ஒசூர் புறநகர், 2) G. ராமன் CR 7190 -ஒசூர் புறநகர்,3) S. சீனிவாசன் CR 6315 - பாலக்கோடு,

4) G. மந்திரி CR 6596 - தர்மபுரி நகர், 5) K. பூபதி DR 7502 -தர்மபுரி நகர்,6) P. பாலாஜி CR 7406 -தர்மபுரி நகர், 7) S. மாதேஸ்வரன் CR 6356 - தர்மபுரி புறநகர், 8) M. அன்பழகன் CR 7216 - தர்மபுரி புறநகர், 9) S.M. முருகேசன் CR 7349 -தர்மபுரி புறநகர், 10) M. மாது DR 6760 - ஊத்தங்கரை, 11) R. கண்ணன் CR 6677 -திருப்பத்தூர் 12) L. ராஜேஷ் CR 6706-கிருஷ்ணகிரி நகர், 13)V.சின்னராஜ் DR 7059-கிருஷ்ண கிரி நகர், 14)S.மனோகர் TR 5167-கிருஷ்ணகிரி நகர், 15)N.வெங்கடேஷ் DR 7284-கிருஷ்ணகிரி புறநகர், 16)M.கோவிந்தசாமி DR7753-கிருஷ்ணகிரி புறநகர், 17)G.ஆரோக்கியராஜ் CR 7133-கிருஷ்ணகிரி நகர், 18)S.ரவி DR 8322 - தேன்கனி கோட்டை.

இடம் : கலைஞரகம்
நாள்: 17.10.2026.

மு.சண்முகம்
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கடலூர் இரெ. இளம்வழுதி
அக்டோபர் 22 (1970)



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திராவிடர் கழக மாணவர் அமைப்புக்கு செயலாளராக இருந்தவர்.

தி.மு.க. தொடங்கிய நாளிலிருந்து பல்வேறு பொறுப்புகளில் செயல்பட்டவர்.

'பொன்மொழி' என்ற கழக இதழை தனது இறுதி காலத்தில் தொடங்கி நடத்தினார்.

தலைசிறந்த வழக்கறிஞராக, தலைமைக் கழகப் பேச்சாளராக விளங்கினார்.

1967ல் சட்டப்பேரவை உறுப்பினராக பணியாற்றியுள்ளார். அறிஞர் அண்ணாவால் 'கறுப்பு இளவரசர்' என அழைக்கப்பட்ட இவர், தலைவர் கலைஞரின் ஆருயிர் நண்பர். இறுதி மூச்சு வரை, இயக்கப் பணியாற்றிய பகுத்தறிவு பண்பாளர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

என்.ஆர்.பி.சீனிவாசன்
அக்டோபர் 22 (2022)



இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக பணியாற்றியவர்.

நம்பரை ஊராட்சி மன்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.